நாள் 17.08.2023.

அசல் வழக்கு எண் 33/2020

வா சா 1 தாமஸ், த/பெ மூக்கன் நாடார்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பழைய வழக்கான அசல் வழக்கு 11/2001ல் நான் வாதி என்றால் சரிதான். அதில் நிறைவேற்றுதல் மனு எண் 29/2006 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நிறைவேற்றுதல் மனுவில் உள்ள அமீனா ஒழிப்பு சம்பந்தமாக தாக்கல் செய்த அறிக்கை வா சா ஆ 6 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த் அமீனா அறி'க்கையில் மொத்தமுள்ள 92 செண்டில் பிரிவின்றி 23 செண்ட் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பிராதில் மொத்தம் உள்ள 92 சென்டில் வடக்கடைய 23 செண்ட் என்ற காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வடக்கடைய 23 சென்டில் என்னுடைய சொத்து உள்தாக எந்த ஆவணத்தின் மூலம் நான் தெரிந்துகொண்டேன் என்றால் பத்திரம் போட்டு நாங்கள் எழுதிக்கொண்டோம். எனது சொத்திற்கு கிழக்கே தர்மர் நாடார் இடம் தற்போது திருமுருகன் இடம் இருக்கிறது என்றால் சரிதான். தர்மர் நாடாரின் பேரன்தான் திருமுருகன். திருமுருகனுக்கு இதே சர்வே எண்ணில் சொ'த்து உள்ளதா என்றால் ஆமாம். சர்வே எண் 10/7 ல் உள்ளது. சர்வே எண் 10/6 முழுவதும் 23 செண்ட் இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 92 ல் வடக்கோரம் 23 செண்ட் என்னுடை இடம் ஆகும். எனது சொத்திற்கு தெற்கே நல்லதம்பி நாடார், அம்பையா ஜெபராஜ் இடமம் உள்ளதாக பிராதில் சொல்லியு'ளளேன் என்றால் சரிதான் நல்லதம்பி நாடார் மக்கள்தான் அம்பையா மற்றும் ஜெபராஜ். அம்பையா மற்றும் ஜெபராஜ் இதே சர்வே எண்ணில்தான் இருக்கிறார்களா என்றால் ஆமாம். மேற்கே நல்லதம்பி நாடா' , பால்ராஜ் சொத்து சிங்கிகுளம் கிராமத்தில் இருப்பதாக சொல்லியு'ளளேனா என்றால் சிங்கிகுளம் கிராமம் கிடையாது மேலக்ரை கிராமம் கீழஉப்பூரணியில்தான் உள்ளது. மேற்கே உள்ள நல்லதம்பி நாடார் மற்றும் பால்ராஜ் சொத்தும் இதே சர்வே எண்ணில் உள்ளதா என்றால் ஆமாம் சர்வே எண் 10/5 ல் இருக்கிறது. எனது பிராது

மேற்கு எல்கையில் சிங்கிகுளம் கிராமம் எல்கை என்று சொல்லியுள்ளது சரியா தவறா என்று சொன்னால் சரிதான் அது சிங்கிகுளம் பஞ்சாயத்து ஆகும். எனது கட்சி படி சர்வே எண் 10/5 சிங்கிகுளம் கிராமத்தில் இருப்பதாக கட்சி செய்கிறேனா என்றால் இல்லை மேல்கரை கீழ உப்பூரணி கிராமத்தில்தான் உள்ளது. எனது கிரையப்பத்திரத்தில் வடக்கோரமாக சர்வே எண் 10/6 ல் 23 செண்ட் உள்ளதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். சர்வே எண் 10/6 ல் உள்ள இதர பங்குதாரர்கள் அவர்களுடைய சொத்திற்கு எந்த வழியாக வந்து செல்கிறார்கள் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான் அவரவர் சொத்தை அவரவர் அனுபவித்து வருகிறார்கள். எனது 23 செண்டிற்கு கிழக்கே தர்மர் நாடார் சொத்து சர்வே எண் 10/7 ல் உள்ளது. எனது சொத்திற்கும் சர்வே எண் 10/7 க்கும் இடையில் தென்வடல் பாதை இல்லை என்றால் சரிதான். நான் 23 செண்டிற்கும் எல்கை சொல்லியுள்ளது இதர பங்குதாரர்களின் உரிமையை பாதிக்கும் வகையில் சொல்லியு்ள்ளேன் என்றால் அது தவறு. நான் வழக்கு பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் உரிமை உண்டு என்றும் பிரதிவாதிகளின் உரிமையை பறி்கும் விதத்தில் அவர்களுக்கு தாவா சொத்தில் உரிமையில்லை என்று மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிராது பத்தி 3 ல் செல்லத்தாய் அம்மாளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என் நான் சொல்லியிருந்தால் அது சரியா தவறா என்றால் , சரிதான். வா சா ஆ 2 ம் பக்கத்தில் செல்லத்தாய் அம்மாளி்ன் கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்ற சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். செல்லத்தாய் அம்மாளுக்கு பிள்ளைகள் உள்ளதா என்றால், இரண்டு பெண் மக்கள் இருக்கிறார்கள் இரண்டு ஆண் மக்கள் இறந்துவிட்டார்கள். அந்த இரண்டு பெண் மக்களிடம் இருந்தும் சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். எனக்கு இவ்வழக்கை தாக்கல் செய்யவும் விளம்புகை பரிகாரம் கேட்க உரிமையில்லை என்ாறல் சரியல்ல தாவா சொத்தில் எனக்கு முழு உரிமை ஏற்படவில்லை என்று சொன்னால் அது தவறு வழக்கு பிரதிவாதிகள் கூட்டுப்பங்காளிக்ள் என்ற சொன்னால் அவர்களுக்கு தாவா சொத்து உள்ள இடத்தில் சொத்தே

கிடையாது. வழக்கு பிரதிவாதிகள்தான் தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளனர் என்றும் அதனால் தாவா சொத்தில் நான் விளம்புகை பரிகாரம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றுசொன்னால் சரியல்ல முந்தைய வழக்கு பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.